பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**14 09 2026 MONDAY 6.30 PM**

<u>மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) வங்கி மற்றும் அத்தியாவசிய சேவைகளை மக்களுக்கு நேரடியாக கொண்டுசேர்க்கும் வகையில் இந்திய அஞ்சல்துறை மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

2) தமிழகத்தில் 11 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் லண்டனில் முதலமைச்சர் திரு விஜய் முன்னிலையில் இன்று கையெழுத்தானது.

3) விநாயகர் சதுர்த்தி பண்டிகையை முடித்துவிட்டு சென்னை திரும்பும் மக்களின் வசதிக்காக நாளை, ஆயிரத்து 325 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என்று மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு தமிழன் பார்த்திபன் தெரிவித்துள்ளார்.

4) சட்டப்பேரவையில் அனைத்துக்கட்சி உறுப்பினர்களுக்கும் சமமான வாய்ப்புகள் வழங்கப்படுவதாக பேரவைத் தலைவர் திரு ஜே சி டி பிரபாகர் கூறியுள்ளார்.

5) நீலகிரி, கோயம்புத்தூர், தேனி உள்ளிட்ட 16 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

---இனி விரிவான செய்திகள்---

<<<<<<>>>>>>

வங்கி மற்றும் அத்தியாவசிய சேவைகளை மக்களுக்கு நேரடியாக கொண்டுசேர்க்கும் வகையில் இந்திய அஞ்சல்துறை மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று அகில இந்திய அஞ்சல் துறை பணியாளர் சங்கங்களின் தலைவர்களுடன் உரையாடிய திரு ஜிதேந்திர சிங், மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தபால்காரர்கள் மூலமாகவே மக்களுக்கு நேரடியாக அரசின் சேவைகள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

மக்கள் சேவைக்கான பெரிய கட்டமைப்பாக அஞ்சல்துறை உருவெடுத்துள்ளது என்று அவர் கூறினார்.

அரசின் திட்டங்களுக்கு வலுசேர்க்கும் வகையில், இந்த துறையை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மக்களின் சேவையை மையப்படுத்தும் கட்டமைப்பாக அஞ்சல்துறையை பிரதமர் திரு நரேந்திர மோடி நவீனமயமாக்கியுள்ளதாக அகில இந்திய அஞ்சலகத்துறை சங்கங்களின் பிரதிநிதிகள் அமைச்சரிடம் தெரிவித்தனர்.

இதற்கான கட்டமைப்பை உருவாக்கிய பிரதமருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர்கள் கூறினர்.

நாட்டின் தூரப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கும் அரசின் சேவையை கொண்டுசெல்லும் வகையில் அஞ்சல்துறை பணியாளர்கள் சிறப்பாக செயல்படுவார்கள் என்றும் அமைச்சர் திரு ஜிதேந்திர சிங்கிடம், அஞ்சல்துறை சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் 11 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் லண்டனில் முதலமைச்சர் திரு விஜய் முன்னிலையில் இன்று கையெழுத்தானது.

இதுதொடர்பாக, முதலமைச்சர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சம்வர்தனா மதர்சன் இண்டர்நேஷனல் நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்தின்மூலம், 7 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த நிறுவனம் வடிவமைப்பு, பொறியியல், தளவாட வசதிகள் உள்ளிட்ட தொழில்களில் இந்த முதலீட்டை மேற்கொள்ளும் என்றும் கூறியுள்ளார்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் சம்வர்தனா நிறுவனத்தின் அதிகாரி திரு **Barry Painter,** தமிழ்நாடு அரசின் வழிகாட்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு தீபக் ஜேக்கப் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்ச்சியில், பிரிட்டனுக்கான இந்திய தூதர் திரு குமரன் பெரியசாமி மற்றும் உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

<<<<<<>>>>>>

விநாயகர் சதுர்த்தி பண்டிகையை முடித்துவிட்டு சென்னை திரும்பும் மக்களின் வசதிக்காக நாளை, ஆயிரத்து **325** சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என்று மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு தமிழன் பார்த்திபன் தெரிவித்துள்ளார்.

சென்னையை அடுத்த கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் ஆய்வு மேற்கொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

***(Sound Byte — தமிழன் பார்த்திபன் - 39 Sec.)***

<<<<<<>>>>>>

சட்டப்பேரவையில் அனைத்துக்கட்சி உறுப்பினர்களுக்கும் சமமான வாய்ப்புகள் வழங்கப்படுவதாக பேரவைத் தலைவர் திரு ஜே சி டி பிரபாகர் தெரிவித்துள்ளார்.

தென்காசி மாவட்டம் பரங்குன்றாபுரம் கிராமத்தில் புதிய பள்ளி கட்டிடத்தை திறந்துவைத்து பேசிய அவர், ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு அளிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

***(Sound Byte — ஜே சி டி பிரபாகர் - 39 Sec. )***

இரட்டைக்குளம் கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற இப்பகுதி மக்களின் கோரிக்கையை முதலமைச்சரின் கவனத்திற்கு தாம் கொண்டு செல்ல இருப்பதாகவும் திரு ஜே சி டி பிரபாகர் தெரிவித்தார்.

மாணவர்கள் நலனுக்காக புதிய பள்ளிக்கட்டிடம் அமைத்துள்ளதை தாம் வரவேற்பதாகவும் அவர் கூறினார்.

<<<<<<>>>>>>

சென்னை முதல் தமிழகத்தின் தென் மாவட்டங்கள் வரை அனைத்துப்பகுதிகளிலும் மின்வெட்டினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கோடை காலத்தில் வெப்பத்தின் தாக்கம் இவ்வாண்டு அதிகம் இருந்ததால், மின்தேவையும் அதிகரித்தது என்றும், தற்போதும் வெப்பம் தணியாததால் கடந்த

ஆண்டைவிட கூடுதலாக மின்சாரம் தேவைப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

கூடுதல் மின்தேவையை சமாளிக்க மாநில அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்காததால்தான் மின்வெட்டு நீடித்து வருவதாக அவர் குறை கூறியுள்ளார்.

மின்வெட்டை சமாளிக்க 2 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், களத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

மின்வெட்டினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை புரிந்துகொண்டு உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

தாராபுரம் மற்றும் மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெறவுள்ள இடைத்தேர்தலில், விடுதலை சிறுத்தைகள் கட்சி, தவெக-வுக்கு ஆதரவு அளிக்கும் என்று அக்கட்சியின் தலைவர் திரு தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

மதுரை அவனியாபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த தேர்தலில் இடதுசாரி கட்சிகள் தனித்துப் போட்டியிடுவதாக எடுத்துள்ள முடிவு அவர்களின் அரசியல் உரிமை என்று கூறினார்.

மதுரை மீனாட்சியம்மன் கோவில் குடமுழுக்குக்கான திருப்பணிகள் நிறைவுபெற்றுள்ள சூழலில் அங்கு தமிழில் அர்ச்சனை செய்து குடமுழுக்கு நடைபெற வேண்டும் என்று தங்கள் கட்சி வலியுறுத்துவதாகவும் திரு தொல் திருமாவளவன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

நீலகிரி, கோயம்புத்தூர், தேனி உள்ளிட்ட 16 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

*(Sound Byte — வி ஆர் துரை - 69 Sec.)*

<<<<<<>>>>>>

மாவட்டச் செய்திகள்

திருநள்ளார் ஸ்ரீதர்ப்பாரண்யேஸ்வர சுவாமி ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, நடைபெற்ற கஜபூஜையில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

---------

கள்ளக்குறிச்சி கோட்டைமேடு செல்வ விநாயகர் கோவிலில் பிள்ளையார் சதுர்த்தி கண் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

-----------------

விநாயகர் சதுர்த்தி பண்டிகையை முன்னிட்டு, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி மலர் சந்தையில் பூக்களின் விலை உயர்ந்துள்ளதால் வியாபாரிகளும், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்தனர்.

-------------

சென்னை, அம்பத்தூர் மண்டலத்தில் உள்ள அத்திப்பட்டு வானகரம் பகுதியில், 2 கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நாய்கள் கருத்தடை மையத்தில் சென்னை மாநகர ஆணையர் திரு. சமீரன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

------------

துபாயிலிருந்து சென்னை வந்த பயணி ஒருவரிடமிருந்து 97 லட்சம் ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்களை விமான நிலைய சுங்கத்துறையினர் இன்று பறிமுதல் செய்தனர்.

**<<<<<<END>>>>>>**